வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். 54/2022

வழக்கு சாட்சி PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஸ்வரி | ஜாதி | |
| கணவர்/தந்தை | சர்வலிங்கம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 41 |

தேதி 29.08.2024

1வது எதிரி ஆஜர். 2,3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

**நான் பாடியநல்லுரில் கடந்த 10 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். அ.சா.1 சர்வலிங்கம் எனது கணவர். என்னுடைய கணவர் மூலக்கடையில் உள்ள ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். எவ்வளவு நாட்களாக வேலை பார்க்கிறார் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய கணவர் குணசேகரன் மற்றும் ராணி ஆகியோர்களிடம் கடந்த 6 வருடங்களுக்கு ஏலச் சீட்டு போட்டிருந்தார். மேற்படி ஏலச் சீட்டுக்காக எனது கணவர் 8 லட்சத்துக்கு மேலாக கட்டியுள்ளார். ஆனால் என் கணவர் மேற்படி பணத்தினை மேற்படி நபர்கள் எதிரிகள் திருப்பி கொடுக்கவில்லை. அதன்காரணமாக எனது கணவரை குணசேகரன், ராணி, சுரேஷ், பிரகாஷ் ஆகியோர்கள் ஏமாற்றி விட்டார்கள்.. பிரகாஷ், சுரேஷ இருவரும் குணசேகரன், ராணி, மகன்கள் ஆவர்ர்கள். எனவே என் கணவர் மாதவரம் காவல் நிலையத்தில் புகார்**

கொடுத்தார். மேற்படி புகார் தொடர்பாக என்னை போலீசார் விசாரித்தார்கள். மேற்படி நபர்களிட்ம் பணம் கொடுத்ததை பற்றி எனது கணவர் என்னிடம் சொன்னார்.

குறுக்கு விசாரணை

எனது கணவர் மாத வருமானம் என்னவென்றால் ரூ. 40,000. எனக்கு குணசேகரன், ராணியை தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எங்களது வீட்டிற்கு வந்தார்கள். நான் அவர்கள் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் இல்லை. நான் சீட்டு ஏலத்திற்கு சென்றுள்ளேனா என்றால்இல்லை. எனது கணவர்தான் செல்வார். வீட்டிற்கு வந்து எனது கணவரிடம் பணம் வாங்கி செல்வார்கள். மற்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர் எதிரிகள் வீட்டிற்கு சென்று கட்டுவார். ஏலச் சீட்டு தொடர்பாக ரசீது அளிப்பது தெரியுமா என்றால் தெரியும். யார் கொடுப்பார்கள் என்றால் அவரது பிள்ளைகள் வந்து பணம் வர்ங்கிவிட்டு கொடுப்பார்கள். கையொப்பம் செய்துகொடுத்தாரா என்றால் இல்லை. எனது கணவரிடம்தான் வாங்குவார்கள். எனது கணவர் சீட்டு போடவில்லை என்றாலும் பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.